செய்தி வெளியீடு எண்:009 நாள் :08.01.2015

**பத்திரிக்கைச் செய்தி**

குடும்ப அட்டையில் மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னையில் 16 மண்டல பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் ஜனவரி 2015 மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்ட முகாம் 10.01.2015 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி உள்ள குடும்ப அட்டைதாரர்கள் குடும்ப அட்டைகளில் பெயர், முகவரி மாற்றம், திருத்தம் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | இந்து தியாலாஜிகல் மேல் நிலைப்பள்ளி, 107 ஆதியப்ப நாயக்கன் தெரு, சௌகார்பேட்டை , சென்னை 600 0079 (மிண்ட் தெரு மகாசக்தி ஓட்டல் அருகில்) |
| 2 | இராயபுரம் | சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, கார்னேஷன் நகர், எண்ணூார் நெடுஞ்சாலை, கொருக்குபேட்டை, சென்னை 600 021. (IOC பவர் ஹவுஸ் அருகில்) |
| 3 | பெரம்பூர் | சென்னை நடுநிலைப்பள்ளி, 78, நேரு ஜி 1வது தெரு, புதிய காமராஜ் நகர், சென்னை 600 039. (ஈஸ்வரி திருமண மண்டபம் பஸ் நிறுத்தம், ரிலையன்ஸ் சூப்பர் மார்க்கெட் பின்புறம்) |
| 4 | அண்ணாநகர் | சென்னை நடுநிலைப்பள்ளி, 32, சுந்தரம் பிள்ளை தெரு, புரசைவாக்கம், சென்னை 600 084. (அடையாறு ஆனந்தபவன் எதிர் தெருவில்) |
| 5 | அம்பத்தூர் | அம்பத்தூர் நகராட்சி நடுநிலைப்பள்ளி 1, பிள்ளையார் கோயில் தெரு, பாடிக்குப்பம், சென்னை 600 107. (பாடிக்குப்பம் பஸ் நிறுத்தம் அருகில்) |
| 6 | வில்லிவாக்கம் | சென்னை மாநகராட்சி அலுவலக கட்டிடம், 77, காமராசர் சாலை, விருகம்பாக்கம், சென்னை 93. (ஜெயகோபால் கரோடியா மேல்நிலைப்பள்ளி அருகில்) |
| 7 | திருவொற்றியூர் | அரசினர் உயர்நிலைப்பள்ளி, கவியரசு கண்ணதாசன் நகர், 5வது பிளாக் கொடுங் கையூர், சென்னை 600 118. (கொடுங்கையூர் காவல்நிலையம் பின்புறம்) |
| 8 | ஆவடி | நற்பணிநலமன்றம், ஆனந்த விநாயகர் கோவில் தெரு, பூம்பொழில் நகர் கோவில் பதாகை, ஆவடி, சென்னை 600 062. (HVF எஸ்டேட் குடியிருப்பு பின்புறம்) |
| 9 | தி.நகர் | ஆதி திராவிடர் நடுநிலைப்பள்ளி, ஆற்காடு ரோடு, வளசரவாக்கம், சென்னை 87. (வளசரவாக்கம் காவல்நிலையம் அருகில்) |
| 10 | மயிலாப்பூர் | சென்னை மாநகராட்சி சமுதாய நலக்கூடம், 30,சிபி ராமசாமி ரோடு, மயிலாப்பூர், சென்னை 4. (ஆழ்வார்பேட்டை அம்மா உணவகம் அருகில்) |
| 11 | பரங்கிமலை | அரசினர் மேல்நிலைப்பள்ளி பஜனை கோயில் தெரு, அர்ஜுனாபுரம், குரோம்பேட்டை, சென்னை 64. (அர்ஜுனாபுரம் பேருந்து நிலையம் அருகில்) |
| 12 | தாம்பரம் | சமுதாயநலக்கூடம், முடிச்சூர் மெயின் ரோடு, முடிச்சூர், சென்னை 48 (சர்ச் எதிரில்) |
| 13 | சைதாப்பேட்டை | கிரிஸ்டியன் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, எண்3, வண்டிக்காரன் தெரு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை 32. (பூந்தமல்லி ரோடு அருகில்) |
| 14 | ஆயிரம்விளக்கு | செயின்ட் ஜோசப் மேல்நிலைப்பள்ளி(ஆண்கள்), வேப்பேரி நெடுஞ்சாலை, சென்னை 7. (கால்நடை மருத்துவகல்லூரி அருகில்) |
| 15 | சேப்பாக்கம் | சென்னை உயர்நிலைப்பள்ளி, வீரபெருமாள் கோவில் தெரு, மயிலாப்பூர் சென்னை 4. (விவேகானந்தா கல்லூரி எதிரில்) |
| 16 | சோழங்கநல்லூர் | பஞ்சாயத்து அலுவலகம், ஒட்டியம்பாக்கம், சென்னை 126. |

ஆணையாளருக்காக

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**